

நாகை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் – மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லாவை ஆதரித்து கழகத் துணைப் பொதுச் செயலாளர் கவிஞர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நாகை நெல்லுக்கடை மாரியம்மன் கோயில் அருகே வாக்கு சேகரித்தார்.உடன் மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் மற்றும் பலர் உள்ளனர்.

### திருச்சியை முன்னோடியாக கொண்டு செல்ல வேண்டும் என்றால்

# திராவிட மாடல் ஆட்சியே மீண்டும் தொடர வேண்டும்

### அமைச்சர் கே.என்.நேருவை ஆதரித்து கமல்ஹாசன் எம்.பி. - பிரசாரம்!

திருச்சி, ஏப்.22-

திராவிடத்தை யாராலும், எவனாலும் வீழ்த்த முடியாது என மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தெரிவித்தார்.

திருச்சி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்து பிரசாரம் மேற்கொண்ட மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் திருச்சி மேற்கு தொகுதியில் அமைச்சர் கே.என். நேருவுக்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு பேசியதாவது:




திருச்சி என் மனதில் நெருங்கிய இடம் பிடித்த பகுதி. மறைந்த எனது மூத்த சகோதரர் சந்திரஹாசன் 40 ஆண்டுகள் இங்குதான் இருந்தார். திருச்சியை முன்னோடியாக கொண்டு செல்ல வேண்டும் என்றால் திராவிட மாடல் ஆட்சியே மீண்டும் தொடர வேண்டும். தமிழகத்தை உற்று நோக்குகையில் உலக நாடுகள் பலவும் வியக்கு கின்றன என்றால், அது பள்ளிக் கல்வியில் செய்துள்ள புரட்சியே. மத்திய அரசு மும்மொழிக் கொள்கையை திணித்தபோதும் அதனை ஏற்காது, நிதியை வழங்காவிட்டாலும் தமிழகம் போராடும் என இருமொழிக் கொள்கையில் உறுதியாக நின்றது. தமிழகத்துக்கு தனிக் கல்விக் கொள்கையை உருவாக்கி, குறிப்பாக, கல்வி சேர்க்கையில் பெண்களின் எண்ணிக்கை முன்பிருந்ததைவிட 34 விழுக்காடு அதிகமாகியுள்ளது. அமெரிக்க, ஐரோப்ப நாடுகளே தமிழகப் பொருளாதாரத்தை கண்டு வியக்கிறது. இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கும் மாநிலங்களில் தமிழகம் முன்னோடி யாக உள்ளது. நான் முதல்வன் திட்டம் மூலம் மாணவர்கள் அனைவரையும் முதல்வனாக்கும் திட்டத்தை கொண்டு வந்துள்ளார் முதல்வர் மு.க. ஸ்டாலின். திருச்சிக்கு ஒலிம்பிக் அகாதெமியை அளித்து, சிறிய கிராமங்களில் எல்லாம் விளையாட்டு மைதானத்தை அளித்துள்ளார் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். ஆனால், தில்லியோ தமிழகத்தை திரும்பிப் பார்க்க மறுக்கிறது. பட்ஜெட்டில் தமிழகத்துக்கு ஒதுக்கீடு இல்லை. இது செஞ்சாதான், அது கொடுப்போம் என்பது வியாபாரமா?. இந்தத் திட்டத்தை செயல்படுத்தினால், நிதி என்பது மத்திய அரசின் மிரட்டல் நடவடிக்கையே. மொழியை திணிக்கக் கூடாது. ஒவ்வொரு மொழிக்கும் பாரம்பரியம், வரலாறு உள்ளது. தமிழர்களின் பாரம்பரியத்துக்கு கீழடியே சாட்சி. ஆனால், அந்த கீழடியை ஏற்காது மறைக்க முயலுகின்றனர். எனவேதான், பிரதமருக்கு கீழடி நினைவுச் சின்னத்தை பரிசளித்தேன்.

ஹிந்தி மொழியின் வயது என்ன?. அவரவர் நம்பிக்கை அவருடையது. அதை வேறொருவர் மீது திணிக்கக் கூடாது. குழந்தையிடம் அதுக்கு தேவையில்லாததை வாயில் திணித்தால் துப்பிவிடும். கக்கிவிடும். தமிழகத்துக்கு தேவையில்லாதவற்றை மத்திய அரசு திணித்தால் அதேநிலை உருவாகும்.இந்தத் தேர்தலின் மையக் கருத்தே வளர்ச்சி தொடர வேண்டுமா?, மாநில உரிமைகள் காக்கப் பட வேண்டுமா? என்ற கேள்விகளுக்கான பதில் தான். அந்த பதிலை வாக்கு மூலம் ஏப்.23ஆம் தேதி அனைவரும் தெரிவிக்க வேண்டும்.எதிர்த்து பேசியவர்கள், எதிர் சித்தாந்தம் கொண்டவர்கள், மாற்றுக் கொள்கை கொண்டவர்கள் என 15 கட்சிகளுக்கு மேல் ஓரணியில் அரவணைத்து செல்லும் முதல்வரின் கரத்தை வலுப்படுத்த வேண்டும். ம்ககள் நீதி மய்யம் கட்சிதான் முதன் முதலாக மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் குறித்து பேசியது. அதனை செயல் படுத்திய காரணத்துக்காகவே திமுக அரசை மக்கள் நீதி மய்யம் ஆதரிக்கிறது. கட்சி நலன் பாராது, தமிழகத்தின் நலன்தான் முக்கியம் என்பதற்காவே தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ளோம். மழை, புயல், வெள்ளம், விபத்து காலங்களில் முந்தைய முதல்வர் ஹெலிகாப்டரில் வந்தது தெரியும். இப்போது, மக்களைத் தேடி ஓடோடி வரும் முதல்வர் யார் என்பது மக்களுக்குத் தெரிகிறது. வடக்கு இந்தியா கம்பெனி தமிழகத்தை கைப்பற்ற முயற்சிக்கிறது. ஒரே மாதிரி தேர்தல், ஒரே மாதிரி வண்ணம் என்பது ஒரே நாடாக இருக்காது. சாத்தியமும் இல்லை. தமிழகம் தேசிய நீரோட்டத்துடன் கலக்காது என்பது பெரிய பொய். அமைச்சர் கே.என். நேருவுக்கு சூட்டியுள்ள பெயரே தேசிய நீரோட்டத்தில் தமிழகம் கலந்திருப்பதற்கான சாட்சி. பொய்யான கருத்து திணிப்புகளை நம்பக் கூடாது. கைபேசிகளை திருப்பி வைத்து விட்டு சிந்தித்துப் பார்த்தால் வளர்ச்சி பாதைக்கு அழைத்து சென்றது யார் என தெரியும். திராவிடத்தை யாராலும், எவனாலும் வீழ்த்த முடியாது. எத்தனை கட்சிகள் இருந்தாலும் திராவிடத்தை தொடவே முடியாது .

இவ்வாறு அவர் பேசினார் .

### தளி சட்டமன்றத் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரை ஆதரித்து

# கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் பிரச்சாரம்!

### மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு !

கிருஷ்ணகிரி, ஏப்.22-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பாக தளி சட்ட மன்ற தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் டி.ராமச்சந்திரன் போட்டிருக்கிறார். இன்று அவர் தளி சட்டமன்ற தொகுதி முழுவதும் தீவிரமாக சுற்றுப்பயணம் செய்து வாக்காளர்களை சந்தித்து கடந்த ஐந்து ஆண்டுகளில் திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களை எடுத்துக் கூறி தான் ஐந்தாண்டுகளாக தளி சட்டமன்ற தொகுதியில் பணியாற்றியபோது மக்களுக்கு செய்து கொடுத்த திட்டங்களை எடுத்துக் கூறி கதிர் அரிவாள் சின்னத்திற்கு வாக்கு சேகரித்து வருகிறார். இந்த நிலையில் இன்று கர்நாடக மாநில துணை முதலமைச்சர் D.K. சிவகுமார் தளி சட்டமன்ற தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் டி.ராமச் சந்திரனை ஆதரித்து தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். கெலமங்கலம் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் இந்தியாவுக்கே முன்னோடியாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திகழ்கிறார். தமிழ்நாட்டில் புதிய, புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டங்கள் எல்லாம் இந்தியாவுக்கே முன்உ தாரணமாக உள்ளது தற்போது தேர்தல் அறிக்கையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ள புதிய புதிய திட்டங்கள் மிகவும் பாராட்டுக்குரியதாக உள்ளது. ஆதலால் தளி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் டி. இராமச்சந்திரன் சிறப்பாக பணியாற்றி வருகிறார். ஆதலால் வாக்காளர்களாகிய நீங்கள் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் மீண்டும் தமிழ்நாடு முதலமைச்ச ராக அமருவதற்கு உறுதுணையாக தளி சட்டமன்ற தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் டி.ராம ச்சந்திரன் அவர்களுக்கு கதிர் அரிவாள் சின்னத்தில் வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இந்த பிரச்சாரத்தின் போது கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திண்டிவனம் (தனி) தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வி.சி.க. வேட்பாளர் வன்னி அரசுக்கு பானை சின்னத்திற்கு திண்டிவனம் நகரம், 14 வது வார்டில் கிளைச் செயலாளர் கே.ராஜேந்திரன் தலைமையில் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி ந.ப.மனோகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.எல்.பி.கோபிநாத், என்.ராஜசேகரன், மேஸ்திரி என்.ராஜேந்திரன், ஆர்.சலீம் கான், எம்.தஸ்தஜிர், எம்.டேவிட் ராஜன், டி ஹரிதாஸ், கே.சரவணன், எம்.அபி, கோவிந்தாபுரம் சீதாராமன், பூதேரி எஸ்.பாஸ்கர், பி.கமலக்கண்ணன், காமராஜ், டேவிட் ராஜ், நடராஜன், இதயதுல்லா, ஆர்.விவேகானந்தன், தங்கவேல், சாரம் தயாளன், வி.அருணாச்சலம் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.



தளி சட்டமன்றத் தொகுதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரை ஆதரித்து கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவகுமார் பேசினார். மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்

### முதல்வர் ஸ்டாலினை மிரட்டவோ அடிபணிய வைக்கவோ பா.ஜ.க.வினால் முடியாது!

## தமிழ்நாட்டை விற்கத் துடிக்கும் மோடி, அமித்ஷா!

# தில்லியில் இராணுவ வீரனாக இருந்து தமிழ்நாட்டை காப்பேன்!

## துறையூரில் ராகுல்காந்தி நெகிழ்ச்சி உரை!

**திருச்சி , ஏப். 22-**

**“தமிழகத்தின் கலாச்சாரம், மொழி மற்றும் சமூகநீதி மீது பா.ஜ.க. தொடுக்கும் தாக்குதலைத் தடுக்க, தில்லியில் உங்கள் ராணுவ வீரனாக இருந்து தமிழகத்தைக் காப்பேன்” என்று காங்கிரஸ் தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி உருக்கமாகப் பேசினார்.**



திருச்சி மாவட்டம் துறையூரில் சனிக் கிழமை நடைபெற்ற மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் ராகுல் காந்தி உரையாற்றினார்.

**தமிழகத்தின் ஆன்மாவைப் பறிக்கச் சதி!**

பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ராகுல் காந்தி, “பா.ஜ.க.வும் ஆர்.எஸ். எஸ் அமைப்பும் தமிழர்களின் தொன்மையான மொழி மற்றும் கலாச்சாரத்தை வெறுக் கின்றன. தமிழக முதல்வர் ஸ்டாலினை மிரட்டவோ, அடிபணிய வைக்கவோ முடியாது என்பது பா.ஜ.க.வுக்கு நன்றாகத் தெரியும். எனவே, ஊழல் புகார்களில் சிக்கியுள்ள அ.தி.மு.க. அமைச்சர்களை ஈ.டி., சி.பி.ஐ. அமைப்புகளை வைத்து மிரட்டித் தங்களுக்கு அடிபணிய வைத்துள்ளனர்.

இன்றைய அ.தி.மு.க. என்பது பா.ஜ.க.வின் முக மூடியாகவும், பொம்மை கட்சியாகவும் மாறி விட்டது.

டிரம்ப்பிடம் மோடி சரணடைந்து இந்தியாவை விற்றது போல, தமிழகத்தை விற்கும் ஒரு பொம்மை முதல்வரை இங்கு அமர்த்த மோடியும் அமித் ஷாவும் திட்டமிடுகிறார்கள்” என்று சாடினார்.

**தொகுதி மறுசீரமைப்பு ஒரு துரோகம்!**

“மகளிர் மசோதா என்ற போர்வையில் தென்னிந்திய மாநிலங்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் தொகுதி மறு சீரமைப்பைக் கொண்டு வர பா.ஜ.க. முயன்றது. தமிழகத்தின் சமூகநீதிக் கொள்கை அவர்களுக்கு மிகப்பெரிய எரிச்சலைத் தருகிறது.

சமத்துவத்தைப் போதிக்கும் தமிழகத்தின் சிந்தனையைச் சிதைப்பதே அவர்களின் நோக்கம். ஆனால், அவர்களின் இந்தச் சூழ்ச்சிகளை முறியடித்துத் தமிழகத்தின் உரிமைகளை மீட்டெடுப்போம். தமிழகத்தின் சமூக நீதி கொள்கையை நாடு முழுவதும் விரிவுபடுத்த வேண்டும்” என்று அவர் வலியுறுத்தினார்.

குடும்ப உறவும் பாசமும் “தமிழக மக்களுடனான எனது உறவு அரசியல் சார்ந்தது அல்ல; இது சம மரியாதை, அன்பு மற்றும் ஈர்ப்பால் உருவானது. எனது பாட்டி இந்திரா காந்தி, தந்தை ராஜீவ் காந்தி காலத்திலிருந்து தொடர்ந்து வரும் இந்த உறவு என்றும் நிலைத்திருக்கும்.

தமிழகத்திற்குத் தேவையான உரிமைகளைப் பெற்றுத் தர தில்லியில் நான் உங்களுக்காகப் போராடுவேன்” என்று அவர் நெகிழ்ச்சியுடன் பேசினார்.

முன்னதாக, காங்கிரஸ் வேட்பாளர் லெனின் பிரசாத் வழங்கிய சீரக சம்பா அரிசியைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட ராகுல் காந்தி, “இந்த அரிசியை வைத்துச் சமைப்பேன்” என்று மகிழ்ச்சியுடன் தெரி வித்தார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என். நேரு, காங்கிரஸ் மூத்த தலைவர் கே.வி. தங்கபாலு மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள், நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

### நெ. அருண்குமார் ஏற்பாட்டில்! வேட்பாளர் ஜெயலட்சுமியை ஆதரித்து

# பெரம்பலூரில் தேவேந்திர குல வேளாளர் சமூகத்தினர் பிரச்சாரம்!

### மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் - கழகத்தினர் பங்கேற்பு!

பெரம்பலூர், ஏப்.22-

பெரம்பலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,

பெரம்பலூர் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் நெ. அருண்குமார் ஏற்பாட்டில், தேவேந்திர குல வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த,

தமிழ் மாநில திராவிட முன்னேற்றக் கழகம் மாவட்ட செயலாளர் சதீஷ் குமார்,

வளரும் தமிழகம் மாவட்ட செயலாளர் செல்வன், தமிழ்நாடு தேவேந்திர குல பேரவை மாவட்ட செயலாளர் நித்தீஷ்குமார்,

தீபக் பாண்டி, பேரவை மாவட்ட அமைப்பாளர் பிரவீன்ராஜ் ஆகியோரது தலைமையில் சுமார் 1000 பேர் தங்கள் சமுதாய ஆதரவை தி.மு.க.விற்கு அளித்து வேட்பாளர் S.T.ஜெயலெட்சுமியை பெரு வாரியான வாக்குகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற பாடுபடுவதாக கூறினார்கள். அப்போது வேட்பாளருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தனர்.

மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அனைவருக்கும் பொன்னாடை அணிவித்து வரவேற்றார். இதில்

தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.முருகேசன்,

மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், தலைமை கழக பேச்சாளர் எசனை ஆறுமுகம், திராவிடர் கழக மாவட்ட தலைவர் தங்கராசு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்

அ . அ ப் து ல் க ரீ ம் , மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் காடூர் கவியரசு, துணை அமைப்பாளர்கள் மதுபானம்,

மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், நகர் மன்ற உறுப்பினர் ஜெயசித்ராமணிவாசகம் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



காந்திபுரம் – சித்தாப்புதூர், நகர்ப்புற வாழ்விட குடியிருப்பு பகுதியில் கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் வி.செந்தில்பாலாஜியை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் கழக மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளரும், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவருமான திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி கழக ஆட்சியின் சாதனைகளை திண்ணை பிரச்சாரம் மூலம் விளக்கிக் கூறி வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் பகுதி கழக செயலாளர் சேதுராமன், கோவை தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் சாந்தலிங்கம், கோவை மாநகர் மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ரவிச்சந்திரன், BLA 2, மாசிலாமணி, பிரியா, கழக நிர்வாகிகள், வித்யா ராமநாதன், மனோஜ்குமார், பாலு, பழனிசாமி, கூட்டணி கட்சி நிர்வாகிகள், சி.பி.எம். தர்மன், சி.பி.எம். ராதாகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.